கொள்கை அறிவிப்புகள் அறிவிப்பதாக இருந்தால் அமைச்சர்கள் கள், இந்த அவையில் அறிவித்து பின்னர் மேலவையில், அறிவிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

ஆ. வினாப்பட்டியலில் சேர்க்கப்பெற்ற வினாக்கள் ஒத்திவைக்கப் பெறுதல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முதல் நிகழ்ச்சியாக வினா—விடை நேரத்தைத் தாங்கள் எடுத்துக் கொள் கிறீர்கள். நாள் ஒன்றுக்கு 20 வினாக்கள் அந்தப் பட்டியலில் இடம்பெறச் செய்கிறீர்கள். அப்படி இடம்பெறச் செய்கின்ற நேரத்திலே அமைச்சர் பெருமக்கள் பல்வேறு பொறுப்புகள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் வினாக்கள் இடம் பெறு கின்றன. பெரும்பாலும் நமது முதலமைச்சர் அவர்கள் கேள்வி இடம்பெறுவது இல்லை. பல்வேறு அமைச்சர்களுடைய வினாக்கள் இடம் பெற்றாலும் கூட, சிற்சில நேரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் ஒத்திவைக்கப்படுகின்றன என்று சொல்லுகிறீர்கள். அந்த வசதி அமைச்சர்களுக்குத்தான் இருக்கிறதா, உறுப் பினர்களுக்கு இல்லையா ? நான் கேட்பதெல்லாம் இந்த தலையாய மன்றம் கூடுகின்ற நேரத்திலே எப்படி உறுப் பினர்கள் இங்கே வந்து கலந்து கொள்ளுகிறார்களோ அதைப் போலவே அமைச்சர் பெருமக்களும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேண்டும். அப்படிக் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் இந்த வினாக்களுக்கு விடை அளிப்பதை விட வேறு என்ன முக்கிய பணி அவர்களுக்கு இருக்கிறது என்று நீங்கள் அறிவிப்பீர்களானால் நல்லது. அல்லது அதைக் காரணமாகப் பயன்படுத்திக் கொண்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விகள் அப்படியே விடப்படுவதில்லை. இன்னொரு நாளைக்கு எடுத் துக் கொள்ளப்படும். (குறுக்கீடு) எல்லாச் சட்டமன்றங்களிலும் இந்த நிலை நடைமுறையில் நடந்து கொண்டு வருகிறது. சிலர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பார்கள். சில பேர்கள் வெளி ஊர்களுக்குச் சென்றிருப்பார்கள். சிலருக்கு வேறு சில நிகழ்ச்சிகள் இருக்கும். எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு இருக்கவேண்டிய 'நெசசிட்டி, இல்லை. அதைச் சொல்வது மரபு அல்ல. முறையல்ல.

திரு. கு. பா. பழனியப்பன் :—* * * * *

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இப்படிப்பட்ட நடைமுறைகளை ஏற்றுக் கொள்வதாக இல்லை. நினைத்தபடி பிரச்சனைகளை இங்கே எழுப்ப அனுமதிக்க முடியாது. இதை எல்லாம் நான் அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

(3) வரவு செலவுத்திட்டம் 1982—83, பொது விவாதம்—(தொடர்ச்சி)

* திரு. சே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மிஸ்டர் ஸ்பிக்கர் சார் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் வைக்-கப்பட்டுள்ள 1982–83 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக வயது முதிர்ந்தவர்களுக்கு ஊதியம் அளிக்கும் திட்டம் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டம் ஆகியவற்றை நான் பாராட்டுகிறேன் வரவேற்கிறேன். ஆனால் 1981–82 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பட்ஜெட்டுக்கும், கம்மியாகி 1982–83 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பட்ஜெட்டுக்கும் ஒப்பிட்டு பார்த்தால் ஏறத்தாழ 441 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது. எப்போதுமே பட்ஜெட் வரவு, கம்மியாகி செலவு அதிகமாகக் காட்டுவது தான் பழக்கம். இந்த 441 கோடிக்கு மேலே மேற்கொண்டு ஒரு 200 கோடி ரூபாய் வந்தாலும் கூட அதைப் பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இந்த நிலையில் கிட்டத்தட்ட 600–650 கோடி வரும் என்ற நிலையில் நீங்கள் 31 கோடி ரூபாய்க்கு வரியைச் சுமத்தி இருப்பது மிகவும் தவறு என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் எதற்கு வரி சுமத்தியிருக்கிறீர்கள் என்று பார்த்தால் கைத்தறிப் பட்டுக்கு சேல்ஸ் டாக்ஸ் இன்கிரீஸ் செய்து இருக்கிறீர்கள். அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் குறித்து அரசாங்கத்திற்கு பல பெட்டிஷன்கள் வந்து இருக்கின்றன இதை அவர்கள் அவசியம் கைவிடுவார்கள் என்று நம்புகிறேன். கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்-டுமல்ல, எலெக்டிரிக்கல் கூட்ஸுக்கு வரியை ஏற்றியிருக்கிறார்கள். ஆல்கஹாலுக்கு (Alch hal) ஏற்றி இருப்பதை நான் அவசியம் வரவேற்கிறேன். அதற்கு 25 சதவீதம் என்று போட்டு இருப்பதை 50 சதவீதம் என்று போட்டாலும் சரி. ஆனால் மோட்டார் கார் பார்ட்ஸ், டயர்ஸ், ட்யூபஸ் பிஸ்கெட்ஸ், சாக்லெட், (Sweets) போன்றவற்றிற்கும் வரி போட்டு இருக்கிறீர்கள். இவைகள் எல்லாம் ஏற்கனவே இருக்கும் பண வீக்கத்தை மேற்கொண்டு எந்த நிலைக்கு உயர்த்தும், விலைவாசிகளை உயர்த்தும் என்பதைக்கருத்தில் வைத்து அரசாங்கம் இந்த (Taxe) களை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.